0079

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**கல்விப்பீடம்**
**கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**
**இறுதிப் பரீட்சை**
**STP9811– கல்வி சமூக மற்றும் தத்துவவியல் அடிப்படைகள்**
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

**திகதி:- 24.01.2026** **நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30**

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.**

1. மனிதவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு அடிப்படைக் காரணிகள் பற்றிய விளக்கம் ஆசிரியர்களுக்கு இன்றியமையாததாகும்.
   - **i.** மனிதவிருத்தி தொடர்பான தத்துவங்கள் **மூன்றினை** (03) விளக்குக. (06 புள்ளிகள்)
   - **ii.** மனிதவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான **இரண்டு** (02) காரணிகளை பெயரிட்டு விளக்கி, இக்காரணிகள் மனிதவிருத்தியை எவ்வாறு பாதிக்கும் என்பதை ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** (02) உதாரணங்களை வழங்கி விளக்குக. (10 புள்ளிகள்)
   - **iii.** ஆசிரியர் ஒருவருக்கு விருத்திசார் காரணிகள் பற்றிய விளக்கம் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் எவ்வாறு பயன்மிக்கதாக உள்ளது என்பதை **மூன்று** (03) உதாரணங்களின் துணையுடன் விளக்குக. (09 புள்ளிகள்)

2. மனித மனவெழுச்சிகளின் இயல்புகள் பற்றி விளக்கும் பல்வேறு கொள்கைகள் உள்ளன.
   - **i.** தெரிவுசெய்யப்பட்ட உளவியல் கொள்ளை ஒன்றின் பிரதான எண்ணக்கருக்களுடன் தொடர்புபட்ட வகையில் மனவெழுச்சிகளின் இயல்புகள் பற்றி விமர்சன ரீதியாக ஆராய்க. (06 புள்ளிகள்)
   - **ii.** மத்திய மற்றும் பிந்திய பிள்ளைப்பருவத்தினரின் மனவெழுச்சிசார் விருத்தியின் பிரதான பண்புகள் **மூன்றினை** (03) விளக்குக. (09 புள்ளிகள்)
   - **iii.** மனவெழுச்சிசார் நுண்மதி என்னும் எண்ணக்கருவினை விளக்கி கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஆசிரியர்களுக்கு அதன் முக்கியத்துவத்தை **மூன்று** (03) காரணங்களை முன்வைத்து கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

3.
   - **i.** அவதானம் தொடர்பான பிரச்சினை உடைய மாணவர் ஒருவரின் பிரதான பண்புகளை விளக்குக. (08 புள்ளிகள்)
   - **ii.** கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது அவதானம் பிரச்சினை உடைய மாணவர் ஒருவருக்கு உதவியளிப்பதற்காக ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் **நான்கினை** (04) முன்வைக்குக. (08 புள்ளிகள்)
   - **iii.** உள்ளடங்கல் கல்வி நடைமுறைகள் ஒரு ஆசிரியருக்கு ஏன் அவசியமாகின்றன என்பதை **மூன்று** (03) காரணங்களின் துணையுடன் ஆராய்க. (09 புள்ளிகள்)

4.
   - **i.** "பேரறிகை (மீயறிகை) ஆற்றல்கள்" என்னும் எண்ணக்கருவினை அதன் பிரதான ஆக்கக்கூறுகளுக்கு முக்கியத்துவம் அளித்து விளக்குக. (08 புள்ளிகள்)
   - **ii.** மாணவர் கற்றலில் பேரறிகை ஏன் அனுகூலமானது என்பதை **நான்கு** (04) காரணங்களை முன்வைத்து விளக்குக. (08 புள்ளிகள்)

**iii.** இடைநிலைப்பாடசாலை மாணவர்களிடையே பேரறிகை ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு உதவியளிக்கும் வகையில் ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் **மூன்றினை** (03) விளக்குக. (09 புள்ளிகள்)

5.

**i.** மானுடவியற் கோட்பாட்டுடன் தொடர்புபட்ட வகையில் தனியாளின் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி கலந்துரையாடுக. (07 புள்ளிகள்)

**ii.** பிள்ளைகளிடையே நல்ல பொருத்தப்பாடான ஆளுமையை கட்டியெழுப்ப ஆசிரியர்களும் பெற்றோரும் விரும்புவது ஏன் என்பதை இலங்கைப் பாடசாலை சூழலிலிருந்து உதாரணங்கள் **மூன்றினைக்** (03) குறிப்பிட்டு பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

**iii.** பிள்ளைகளிடையே நல்ல பொருத்தப்பாடான ஆளுமையை கட்டியெழுப்புவதற்காக கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் **மூன்றினை** (03) முன்வைக்குக. (09 புள்ளிகள்)

6.

**i.** ஜோன் டுயீயினால் முன்வைக்கப்பட்ட கற்றல் தொடர்பான அறிகைசார் கட்டுருவாக்கவாதக் கோட்பாடு மற்றும் விகொட்ஸ்கியின் சமூகக் கட்டுருவாக்கவாதக் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களை ஒப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

**ii.** கட்டுருவாக்கக் கற்றலின் பிரதான பண்புகள் **நான்கினைக்** (04) குறிப்பிடுவதுடன் கட்டுருவாக்கவாதத்தின் மூலம் மாணவருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் **மூன்றினை** (03) விளக்குக. (10 புள்ளிகள்)

**iii.** மாணவரிடையே கட்டுருவாக்கக் கற்றலுக்கு உதவியளிக்கும் வகையில் ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் **மூன்றினைக்** (03) விளக்கி நீங்கள் குறிப்பிட்ட உபாயங்களை கற்றல் கற்பித்தல் செயன்முறையில் நடைமுறைப்படுத்தும் போது ஆசிரியர்கள் எதிர்நோக்கக்கூடிய சவால்கள் **இரண்டினையும்** (02) விளக்குக. (10 புள்ளிகள்)

- *பதிப்புரிமை பெற்றது* -